**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 32/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-1 /Lw-6 |
| Name | : | Mr. Ganeshkumar |
| Father Name | : | Subramanian |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.4.2025

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் மணியம்பாளையத்தில் வசித்து வந்து கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். 2008 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. கல்லூரி முடித்துவிட்டு அப்போதுதான் வேலைக்கு சேர்ந்திருந்தேன். சம்பவத் தேதியில் நானும், ராம் குமாரும் கம்பெனியில் வேலையை முடித்துவிட்டு குமாரபாளையம் சென்று கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் பூபதி என்பவர் முதலிப்பாளையம் சாலையில் கார் முன் நின்று கொண்டிருந்தார். அவர் எனக்கு ஏற்கனவே தெரிந்த நபர் எங்களுடைய கம்பெனியில் எம்.டி. டிரைவராக இருந்தார். அதனால் அவரை தெரியும். எதற்காக அங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதன் பிறகு நான் அந்த

இடத்தில் இருந்து சென்று விட்டேன். அதன் பிறகு இரவு கம்பெனியின் பணம் திருட்டுப் போய்விட்டதாக என்னிடம் சொன்னார்கள். கம்பெனியின் பணத்தை பூபதியிடம் இருந்து காரில் யாரோ எடுத்துச் சென்று விட்டதாக சொன்னார்கள். எவ்வளவு தொகை திருடு போனது என்று தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.24 18:15:08 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 32/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-2/Lw-8 |
| Name | : | Mr. Janakiraman |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.4.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் குமாரபாளையத்தில் வசித்து வந்து, கம்பெனியில் எலக்ட்ரிசனாக வேலை பார்த்து வருகிறேன். 2008 வருடம் ரிலையன்ஸ் டையிங் ஒர்க்ஸ் என்ற கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை 2008 ஆம் வருடம் ஒரு நாள் மாலை 4 மணிக்கு எங்கள் கம்பெனியின் வேலை பார்த்து வந்த கேஸீயர் பணம் ஆம்னிகாரில் எடுத்து வந்துள்ளார். அவர் கொண்டு வந்த பணத்தை பிடுங்கிக் கொண்டதாக கம்பெனியில் பரபரப்பாக பேசிக் கொண்டார்கள். கம்பெனியில் எலக்ட்ரீசியன் ஆக வேலை பார்த்து வந்ததால், விவரங்கள் தெரிந்து கொண்ட பிறகு

நான் விவரங்கள் தெரிந்து கொண்ட பிறகு நான் சென்று பார்த்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்த போது மிளகாய் பொடி, கத்தி –1, அங்கு கிடந்தது சம்பவ இடம் முதலிப்பாளையம் பெருந்தொலுவு ரோடின் மையப்பகுதியாகும். கூட்டமாக இருந்தார்கள். அந்த கத்தி மிளகாய் படியை தொட வேண்டாம் என்று சொன்னார்கள். அதன் பிறகு நான் அங்கிருந்து வந்து விட்டேன். பிறகு போலீசார் அழைத்தால் சம்பவ இடத்திற்கு மீண்டும் சென்றேன். வேறு ஏதாவது பொருட்கள் இருக்கிறதா என்று தேடிப் பார்த்துக் கொண்டிருந்தோம். போலீசார் அப்போது வேறு ஒரு கத்தியை எடுத்தார்கள். அதன் பிறகு அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். பத்து நாட்கள் கழித்து எதிரிகளை போலீசார் பிடித்து விட்டார்கள்.

2. கத்தி, மிளகாய் பொடி ஆகியவற்றை எதிரிகளிடம் காண்பித்தார்கள். அவர்கள் பயன்படுத்திய ரெட் கலர் காரை கோயம்புத்தூரில் பிடித்தார்கள். ஒர்க் ஷாப்பில் அந்த கார் இருந்தது அங்கு பிடித்தார்கள். அந்த கார் எஸ்டீம் சிகப்பு கலரில் இருக்கும். அந்த காரை போலீசார் திருப்பூருக்கு கொண்டு வந்தார்கள். அப்போது போலீசார் விசாரணை மேற்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் தான் அன்று நான் செய்தது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–1. எதிரிகளை போலீசார் எங்கு பிடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. காரை போலீசார் போலீஸ் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள். அந்த சமயத்தில் எதிரிகளை நேரில் பார்த்து உள்ளீர்கள் அவர்களை அடையாளம் காட்ட முடியுமா என்று கேட்டபோது சாட்சி வழக்கின் எதிரி பூபதி ஐ நன்றாக தெரியும் என்று கூறினார். நீதிமன்றத்தில் பூபதி உள்ளாரா என்று கேட்டபோது இல்லை என்று சாட்சி கூறுகிறார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள பாலக்குமார், வினோத்குமார், எதிரி ஒன்னு, கோயம்புத்தூரில் கார் செட்டில் எதிரி பாலகுமாரை அன்றைய தேதியில் நான் பார்த்தேன். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் 2008 ல் கையொப்பம் செய்தேன். தற்போது எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை. பணம் காணாமல் போனதை பொறுத்து எங்களுடைய ஓனர் பொய்யான புகாரை கொடுத்துள்ளார். அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒண்ணாவது எதிரியை நான் இதற்கு முன்போ 2008

ஆம் வருடமோ பார்த்ததே இல்லை. வழக்குக்காக போலீசார் சொன்னதை கேட்டுக் கொண்டு பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.04.24 18:15:16 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 32/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-3/Lw-9 |
| Name | : | Mr. Eswaramoorthy |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.4.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் மனியன்காரன்பாளையத்தில் வசித்து வந்து மெக்கானிக் வேலை பார்த்து வருகிறேன். 2008 ஆம் வருடம் வழக்கு சம்பவம் நடந்தது தேதி மாதம் ஞாபகம் இல்லை. கேம். டெக். பிராசஸில் நான் வேலை பார்த்தேன். அங்கு கம்பெனி பணம் காணாமல் போய்விட்டதாக சொன்னார்கள். எவ்வளவு பணம் எப்படி காணாமல் போனது என்றெல்லாம் எனக்கு தெரியாது. காவல்துறை அதிகாரிகள் எங்களை அழைத்துச் சென்றார்கள். ஆவணங்கள் தயார் செய்தார்கள். எங்களுடைய முதலாளி பழனிச்சாமியுடன் நான் சென்றேன். நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆவணங்களை போலீசார் வாங்கிக் கொண்டார்கள். ஆவணங்களில் நான் எதுவும் செய்யவில்லை. காவல் நிலையத்திற்கு சென்று விட்டு திரும்பி விட்டேன். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களிலும் உள்ள இரண்டு கையொப்பம் என்னுடையது தான். சம்பவ இடத்தில் கம்பெனியின் காரை உடைத்து நின்று கொண்டிருந்தபோது. அங்கு போலீசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் கையொப்பங்கள் மட்டும். அ.சா.ஆ–2,3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் படித்துக் காண்பித்தார்கள். எங்களுடைய முதலாளி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு எந்த விவரமும் சம்பவத்தை பற்றி தெரியாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.24 18:15:25 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.